දුරකථන/தொலைபேசி/Telephones :
අමාත්‍ය / அமைச்சர் / Minister 698428
ලේකම් / செயலாளர் / Secretary 695738
පෞද්. ලේකම් / அந். செயலாளர் / Priv. Secretary 698456
සම. ලේකම් / இணை. செயலாளர் / Co-or. Secretary 674115
කාර්යාලය / அலுவலகம் / Office 696211-3
ෆැක්ස් / பெக்ஸ் / Fax 695279 / 691044

මගේ අංකය / எனது இல. / My No. எஸ்/பிஏ
ඔබේ අංකය / உமது இல. / Your No.

රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු හා පරිපාලන ප්‍රතිසංස්කරණ අමාත්‍යාංශය
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சு
MINISTRY OF PUBLIC ADMINISTRATION, HOME AFFAIRS AND ADMINISTRATIVE REFORMS

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 7.
சுதந்திர சதுக்கம், கொழும்பு 7.
Independence Square, Colombo 7.

දිනය / திகதி / Date 30 மே, 2001

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல : 12/2001

அனைத்து அமைச்சுச் செயலாளர்களுக்கும்,
அனைத்து மாகாண சபைப் பிரதம செயலாளர்களுக்கும்,
திணைக்களங்களின் தலைவர்களுக்கும், கூட்டுத்தாபனங்களின் தலைவர்களுக்கும்.

## குடிசன வீட்டுவசதித் தொகைமதிப்பு - 2001

2001 ஆம் ஆண்டில் குடிசன வீட்டுவசதித் தொகைமதிப்பை நடாத்துவதற்கு அரசாங்கத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த தொகைமதிப்பின் போது சேகரிக்கப்படும் தரவுகளானது, திட்டமிடல் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக அரசாங்க நிறுவனங்களினால் பிரதானமாக அந்தந்தப் பிரதேசங்களில் பயன்படுத்தப்படும். 2001ம் ஆண்டின் மே, ஜூன், ஜூலை மாத காலப்பகுதியில் பின்வரும் செயற்பாடுகள் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| (i) | கணக்கெடுக்கும் உத்தியோகத்தர்களின் பயிற்சி (ஏறக்குறைய 100,000 பேர்) | – மே 20 – ஜூன் 20, 2001 |
| (ii) | ஆரம்பத் தொகைமதிப்பு | – ஜூன் 25 – ஜூலை 5, 2001 |
| (iii) | இறுதித் தொகைமதிப்பு | – ஜூலை 17, 2001 மாலை 6.00 மணிக்கும் நள்ளிரவு 12.00 மணிக்கும் இடையில் |

02) தொகைமதிப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் இத்தொகைமதிப்பானது நடாத்தப் படுகின்றது. இதன் கீழ் இந்த தொகைமதிப்பினை நடாத்துவதற்கு மாவட்டச் செயலாளர்களும், பிரதேசச் செயலாளர்களும் தமது பிரதேசங்களில் முறையே தொகைமதிப்பு ஆணையாளர்களாகவும், பிரதித் தொகைமதிப்பு ஆணையாளர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். தொகைமதிப்பின் செயல்முறைப் பகுதியானது பாரியதாகவும் சிக்கலானதாகவும் இருப்பதுடன், பல்வேறு மாவட்ட, பிரதேச அலுவலகங்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் மாகாணசபைகள் என்பவற்றிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள் உட்பட, ஏறக்குறைய 120,000 பேர் நாடு முழுவதும் இத் தொகைமதிப்பிற்காக வேலை செய்கிறார்கள். நாடு முழுவதும் உத்தியோகத்தர்களையும் ஆவணங் களையும் (தொகைமதிப்பு அட்டவணைகள், அறிவுறுத்தல் கைநூல்கள் மற்றும் ஏனைய ஆவணங்கள்) கொண்டு செல்வதற்காக ஒரு வாகனத் தொகுதி பயன்படுத்தப்பட இருக்கிறது.

03) மத்திய அரசாங்கம் மற்றும் மாகாண பொதுச் சேவைகளிலிருந்து பல்லாயிரக் கணக்கான உத்தியோகத்தர்கள் மேற்படி (i), (ii), (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்று வதற்காகக் கணக்கெடுக்கும் உத்தியோகத்தர்கள், மேற்பார்வை உத்தியோகத்தர்கள், பயிற்றுவிப்பாளர்கள் என ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். அலுவலக நேரங்களின் பின்னர் இந்த செயற்பாடுகளில் சிலவற்றை செய்ய முடியாதிருப்பதனால், இந்த உத்தியோகத்தர்கள் அலுவலக நேரத்தில் அந்த வேலைகளைச் செய்வதற்கு இடமளிக்க வேண்டியது அவசியமாகும்.

04) மாவட்டச் செயலாளர்களுக்கும், பிரதேச செயலாளர்களுக்கும் இறுதித் தொகைமதிப்புக்காக 2001 ஜூலை 16 முதல் 19 ஆம் திகதி வரையிலும், மேற்படி (i), (ii), (iii) இல் குறிப்பிட்டுள்ள செயற்பாடுகளைச் செய்வதற்கு வாகனத் தொகுதிகள் தேவைப்படுகின்றன.

05) (i) தொகைமதிப்பு வேலையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்குத் தேவைப்படுகின்ற போதெல்லாம் கடமை லீவு வழங்குமாறு நீங்கள் வேண்டப்படுகின்றீர்கள். அந்த லீவுக்கான வேண்டுகோள் தொகைமதிப்பு ஆணையாளர் அல்லது பிரதி ஆணையாளரால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(ii) மேற்படி (i), (ii), (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய தொகைமதிப்புச் செயற்பாடுகளின் தேவைக்காக, உங்களுடைய நிறுவனத்தின் வாகனத் தொகுதியிலிருந்து இரண்டு அல்லது மூன்று வாகனங்களை (ஒதுக்கப்பட்ட வாகனங்கள் தவிர) ஒதுக்குவதற்கு நீங்கள் மேலும் வேண்டப்படுகிறீர்கள். மாவட்டச் செயலாளர்களும், பிரதேச செயலாளர்களும் இந்த விடயம் சம்பந்தமாக உங்களுடன் தொடர்பு கொள்வார்கள். தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து அந்தந்த மாவட்டச் செயலாளர்களாலும், பிரதேசச் செயலாளர்களாலும் எரிபொருள் செலவுகள் மற்றும் சாரதிப் படிச் செலவு, மேலதிக வேலை நேரக் கொடுப்பனவு போன்றவற்றுக்கான நிதிக் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

06) 2001 ஆம் ஆண்டு தேசிய குடிசன வீட்டுவசதித் தொகைமதிப்பினை வெற்றிகரமாக நடாத்துவதற்காக உங்களின் உதவியும் ஒத்துழைப்பும் வரவேற்கப்படுகின்றது.

07) பொதுத் திறைசேரியின் இணக்கத்துடன் இச்சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது.

ஒப்பம் : எம். என். ஜுனைட்
செயலாளர்
பொதுநிர்வாக, உள்நாட்டு அலுவல்கள்,
நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சு